JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | **25/2020** |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | **P.W. 8** | Prosecution /Defence / Court | |
| Name | சுரேஷ் | Village | ஈரோடு |
| Father's Name | பெருமாள் | Taluk | |
| | | Age | |

**Accused present**.

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of **Date 19.05.2026.**

**முதல் விசாரணை**

**1)** நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கொண்டு ஆயில் பிசினஸ் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது ஆகும். விபத்தில் இறந்து போன மேகநாதன் எனது அண்ணன் ஆவார். 05.03.2016 ம் தேதி பெருந்துறை, சித்தோடு செல்லும் ரோட்டில் விபத்து நடந்ததாக கேள்விபட்டு சென்றேன். விபத்து வழக்கு சம்பந்தமாக பெருந்துறை காவல் நிலைய காவல் ஆய்வாளர் அவர்கள் சம்பவ இடத்தை பார்வையிட்டு படம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்தார். பார்வை மகஜரில் முதலாவதாக நானும், இரண்டாவதாக மற்றொருவரும் சாட்சி கையொப்பங்களை செய்தோம். பெருந்துறை காவல் ஆய்வாளர் அவர்கள் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**1)** விபத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். விபத்து நடந்த தேதி 05.03.2016 ம் தேதி நடந்தது. வழக்கு சம்பந்தப்பட்ட ஆவணங்களில் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்யச் சொன்னார்கள் செய்தேன். போலீசார் இன்று சாட்சி சொல்ல சொன்னதன் பேரில் சாட்சி அளிக்கிறேன். சம்பவ இடத்திற்கு எதற்காக சென்றேன் என்றால் விபத்து நடந்த இடத்தை பார்ப்பதற்காக சென்றேன். சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் நான் கையெழுத்து செய்யவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை